**ஓய்வூதியச் சுற்று நிருப இலக்கம்: 01/2015 (மீளாய்வு I)**

எனது இலக்கம்: ஓய்வூ/சுற்றுநிருபம்/2015
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
09-10-2015.

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
உள்ளூராட்சி நிறுவனத் தலைவர்கள்/ திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/ முப்படைத் தளபதிகள்,
பிரதேச செயலாளர்களிற்கு,

**விதவைகள்/ தபுதாரர் அனாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகைகளை மீளளித்தல்.**

மேற்குறித்த விடயம் தொடர்பில் என்னால் வெளியிடப்பட்ட 10-02-2015 ஆந் திகதி கொண்ட ஓய்வூதியச் சுற்றுநிருபம் 01/2015 இன் விதிமுறைகளுக்கு மேலதிகமானது.

01. மேற்குறித்த 01/2015 சுற்றுநிருபத்தின் (01) மற்றும் (02) இன் கீழ் பங்களிப்புத் தொகைகளை மீளளிப்பது தொடர்பில் கீழ்வரும் வண்ணம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.1 ஓய்வூதியமொன்றுடன் அரச சேவையினை முடிவுறுத்துகின்ற பங்களிப்பாளர்களுக்கு விதவைகள்/ தபுதாரர் அனாதைகள் பங்களிப்புத் தொகைகள் மீளளிப்பதனை, மாதாந்த ஓய்வூதியக் கொடை மற்றும் பணிக்கொடையினைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பத்துடன் (PD 03) சமர்ப்பித்தல் வேண்டும்.

1.2 அதன் பொருட்டு PD 03 மாதிரிப்படிவத்தினைத் திருத்திய வண்ணம் உள்ளடக்கப்பட்டுள்ள "பகுதி IV" இனை குறித்த நிறுவனத்தினால் பூரணப்படுத்திச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ் விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகளை ஓய்வூதியத் திணைக்களத்தினால் நேரடியாகவே குறித்த ஓய்வூதியரிடம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இம்முறை 2015 நவம்பர் மாதம் 01 ஆந் திகதி முதல் செயற்படுத்தப்படும்.

1.3 பங்களிப்பாளர் ஓய்வு பெற முன்னர் பங்களிப்புத் தொகைகளை மீளப் பெறுவதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுவதனால் ஓய்வு பெறும் திகதி வரையிலும் தகுந்த வண்ணம் விதவைகள் அனாதைகள் பங்களிப்புத் தொகைகள் அறவிடப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அதன்படி ஓய்வு பெறும் திகதி வரையில் பங்களிப்புத் தொகையினைக் கணிப்பிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்ற உத்தியோகத்தர்களது சேவை இறுதி நலன்களைத் துரிதமாகப் பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் பற்றி நன்றியினைத் தெரிவிக்கின்றேன்.

**(ஒப்பம்)**
**எஸ்.எஸ். ஹெட்டிஆரச்சி,**
**ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்.**

பிரதிகள்

01. சனாதிபதி செயலாளர்.
02. பிரதமரின் செயலாளர்.
03. செயலாளர் - அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.
04. செயலாளர் - நிதி அமைச்சு.
05. கணக்காய்வாளர் நாயகம்.